இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 08-11-2025

# ‘அரசைத் திருடும் ஆபரேஷன்’

**பா.ஜ.க.வை விட அதிகமாக அசிங்கப்பட்டு நிற்பது இந்தியத் தேர்தல் ஆணையம்தான். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதாவது தவறு நடக்கும். தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு சென்றால் உடனடியாக அவை தடுக்கப்படும். அல்லது வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தவறுகளைச் செய்வதே தேர்தல் ஆணையமாக இருக்கிறது. அதனை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி வருகிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. அதற்கு சாதாரணமாக, ஒப்புக்குக்கூடப் பதில் அளிப்பது இல்லை தேர்தல் ஆணையம்.**

பீகார் மாநிலத்தில் பல லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. இதற்கும் முறையான பதிலை தேர்தல் ஆணையம் சொல்லவில்லை. கர்நாடக மாநிலத்தில் ஒரே ஒரு தொகுதியை மட்டும் எடுத்து வைத்து அங்கு வாக்குத் திருட்டு எப்படி நடந்துள்ளது என்பதை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் அம்பலப்படுத்தினார். இதற்கும் இதுவரை தலைமை தேர்தல் ஆணையர் பொறுப்பான பதிலை இன்னமும் அளிக்கவில்லை. பதிலாக, ராகுல் காந்தியை மிரட்டுவதைப் போல நடந்து கொண்டார் தேர்தல் ஆணையர்.

“வாக்குத் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஏழு நாட்களுக்குள் தனது கையெழுத்துடன் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், அக்குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று உறுதி செய்யப்படும். அதற்காக நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்” என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதில் சொன்னார்.

**ராகுல் காந்தி எந்தத் தொகுதியைச் சொல்கிறாரோ, அதில் முறைகேடு நடக்கவில்லை என்றால் ராகுலைப் போலவே செய்தியாளர் கூட்டம் நடத்தி, அவர் பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் செய்து காட்டியதைப் போல தலைமைத் தேர்தல் ஆணையரும் பவர்பாயிண்ட் பிரசண்டேஷன் நடத்தி இருக்க வேண்டாமா? அதைச் செய்யவில்லை. ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை, தோளில் விழுந்த தூசைப் போலத் தள்ளிவிட்டார் தேர்தல் ஆணையர்.**

நேற்றைய தினம் அடுத்த ஆதாரத்தை அள்ளி வீசி இருக்கிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. அரியானா மாநிலத்தில் 25 லட்சம் வாக்குகள் திருடப்பட்டதாக குற்றம் சாட்டி இருக்கிறார். அந்த மாநிலத்தில் மொத்தம் உள்ள வாக்குகளில் எட்டில் ஒன்று போலியானது என்றும் அவர் சொல்லி இருக்கிறார்.

அரியானா முழுவதும் 5.21 லட்சம் போலி வாக்காளர்கள் உள்ளதாகச் சொல்லி இருக்கிறார். 93 ஆயிரம் வாக்குகள் போலியான முகவரியைக் கொண்டு இருப்பதாகவும் சொல்கிறார். இதை வைத்துப் பார்க்கும் போது அங்கு நடந்துள்ள தேர்தலையே போலியான தேர்தல் என்று தான் சொல்ல வேண்டும்.

**ராகுல் சொன்னதில் அதிர்ச்சியான தகவல் என்ன என்றால், பிரேசில் பெண் ஒருவரைப் பற்றிச் சொன்னது ஆகும். “பிரேசில் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்தியாவின் அரியானா மாநிலத் தேர்தலில் வாக்களித்துள்ளார். பிரேசில் நாட்டைச் சேர்ந்த பெண்ணின் பெயரை ஹரியானா மாநில வேட்பாளர் பட்டியலில் சேர்த்தது எப்படி?” என்று கேட்கிறார் ராகுல். இதற்கு தேர்தல் ஆணையர்தான் பதில் சொல்ல வேண்டும் என்று இல்லை. பிரதமரும் சொல்லலாம். உள்துறை அமைச்சரும் சொல்லலாம்.**

அரியானா மாநிலத்தில் மொத்த வாக்காளர்கள் 2 கோடி பேர். திருடப்பட்ட வாக்குகள் எண்ணிக்கை 25 லட்சம். அரியானாவில் மொத்தம் உள்ள வாக்குகளில் 12.5 சதவீதம் வாக்குகள் திருடப்பட்டுள்ளன. எட்டில் ஒரு வாக்கு அரியானா சட்டமன்றத் தேர்தலில் கள்ள ஓட்டு. இரண்டுக்கு மேல் பதிவான வாக்குகளை அழிக்கும் மென்பொருள் தேர்தல் ஆணையத்திடம் உள்ளது, அதை ஏன் பயன்படுத்தவில்லை? - என்று படபடவென கேள்வி கேட்கிறார் ராகுல் காந்தி. இந்த எந்தக் கேள்விக்கும் பதில் இல்லை. வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட குடும்பத்தினரை நேரடியாக நேரலை செய்து, அவர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

★ அரியானாவில் ராய் சட்டமன்றத் தொகுதியில் 10 வாக்குச் சாவடிகளில் 22 முறை ஒரே நபர் வாக்களித்து உள்ளார்.

★ அரியானா முழுவதும் வாக்காளர் பட்டியலில் 1,22,000 போலி புகைப்படங்கள் உள்ளது.

★ இல்லாத ஒரு முகவரியில் 501 வாக்காளர்கள் உள்ளனர்.

- இவை எல்லாம் ராகுல் அம்பலப்படுத்தியதில் சில துளிகள்.

இதற்கு ராகுல் காந்தி அருமையான பெயரை வைத்துள்ளார். ‘அரசைத் திருடும் ஆபரேஷன்’ என்று பெயர் சூட்டி இருக்கிறார். அரசைத் திருடும் ஆபரேஷனை தேர்தல் கமிஷன் கமுக்கமாகச் செய்து கொண்டு இருக்கிறது. அவர்கள் நேர்மையான தேர்தலை நடத்தவில்லை. வாக்குகளைத் திருடிக் கொண்டு இருக்கிறார்கள். பா.ஜ.க. உண்மையாக வெல்லவில்லை. இது போன்ற திருட்டுத் தனங்கள் மூலமாகவே வெல்கிறது.

மகாராஷ்டிரா, அரியானா சட்டமன்றத் தேர்தல்களிலும், மக்களவைத் தேர்தல்களிலும் வாக்கை பா.ஜ.க. திருடியது, இப்போது பீகார் தேர்தலிலும் திருட விரும்புகிறது. இதைத் தான் மற்ற மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறார்கள். ஆனால் மக்களை விழிப்பு பெற வைத்துள்ளது ராகுல் காந்தியின் பேட்டிகள்.

“இளைஞர்களே, நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். ஏனென்றால் உங்களது எதிர்காலத்தைப் பற்றித்தான் நான் தற்பொழுது பேசுகிறேன். உங்களது வாக்குரிமையை நிலைநாட்டுவதற்காகத்தான் பேசுகிறேன்” என்று சொல்லி இருக்கிறார் ராகுல் காந்தி. இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு முன், மக்களாட்சியை நிலை நிறுத்துவதற்கு முன்னதாக, அனைவரும் தங்களது வாக்குரிமையை நிலைநாட்ட வேண்டும்.

●●

## தீர்ப்பாய சீர்திருத்த வழக்கை ஒத்திவைக்கச் சொல்வதா?

# ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!

புதுடெல்லி, நவ. 8 -

தீர்ப்பாயங்கள் சீர்திருத்த வழக்கை ஒத்திவைக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசின் கோரிக்கையை உச்சநீதிமன்றம் நிராகரித்து விட்டது. மேலும் நீதிமன்றத்துக்கு அநீதி இழைக்கும் வகையில் ஒன்றிய அரசின் செயல்பாடு இருப்பதாகவும் உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தீர்ப்பாயங்கள் சீர்திருத்த வழக்கு கடந்த வாரம் உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி அமர்வு முன் விசாரணைக்கு வந்த போது இந்த வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற வேண்டும் என்று ஒன்றிய அரசு தரப்பு தெரிவித்தது. ஆனால் ஒன்றிய அரசின் வாதத்தை நிராகரித்த தலைமைநீதிபதி அமர்வு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தது.

அதன்படி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வர இருக்கும் நிலையில், ஒன்றிய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி தலைமை நீதிபதி அமர்வு முன் ஆஜராகி, அட்டர்னி ஜெனரல் ஆஜராக முடியாத நிலையில் இருப்பதால் வழக்கை 10 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அந்த கோரிக்கையை ஏற்க மறுத்த தலைமை நீதிபதி, ஏற்கனவே இரு முறை வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆஜராக பல வழக்கறிஞர்கள் ஒன்றிய அரசிடம் உள்ளபோது மீண்டும் அவகாசம் கோருவது ஏன்? இது நீதிமன்றத்துக்கு இழைக்கும் அநீதி என்றும் கடுமையாக விமர்சித்தார்.

ஏற்கனவே வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்றக்கோரி ஒன்றிய அரசு நள்ளிரவில் மனு தாக்கல் செய்ததையும் தலைமை நீதிபதி சுட்டிக்காட்டினார். ஒன்றிய அரசின் செயல்பாடு குறித்து கடுமையான அதிருப்தியை தெரிவித்த தலைமை நீதிபதி, வேறு எந்த வழக்கையும் விசாரணைக்கு எடுக்காமல் நாள் முழுவதும் இந்த வழக்கை விசாரித்து முடித்து வார இறுதியில் தீர்ப்பு எழுதலாம் என்று திட்டமிட்டிருந்ததை குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.11.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, ஜெர்மனி நாட்டில் நவம்பர் 9 முதல் 14 வரை நடைபெறவுள்ள நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி குறித்த சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்ள செல்வதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 72,880 பயனாளிகளுக்கு 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் செ.தனலிங்கம் மற்றும் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## வேலூர் மாவட்டம் காட்பாடியில் வரவேற்பு!

# தி.மு.க. வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவோம்!

## வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. பேச்சு!

வேலூர், நவ. 8-

வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளராக டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நியமிக்கப்பட்டார். அவர் சென்னையில் இருந்து காட்பாடிக்கு வருகை வந்தார். அங்கு பகுதி செயலாளர்கள் ஜி. வன்னியராஜா, எம்.சுனில் குமார், என்.பரமசிவம் , ஒன்றிய செயலாளர்கள் எஸ்.தணிகாசலம், சரவணன், கருணாகரன், ரவி, முருகன், ஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், மண்டல குழுத் தலைவர் புஷ்பலதா,

ஒன்றிய அவைத்தலைவர் எம்.எஸ். ராஜா, மாநகராட்சி கவுன்சிலர்கள் அன்பு, விமலா, ரவிக்குமார், டீடா சரவணன், வி.ஆர். நித்தியகுமார், பிரம்மபுரம் ஊராட்சி தலைவர் ராதாகிருஷ்ணன், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட துணைச் செயலாளர் டீக்காராமன் மற்றும் தி.மு.க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வரவேற்றனர்.

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., அண்ணா சிலைக்கும், அதன் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் உருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது அவர் பேசுகையில், கட்சித் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ளேன்.

அதனை பொறுப்புடன் பெற்றுக் கொண்டு அத்தனை காரியங்களையும் சிறப்பாக நிறைவேற்றுவேன். காட்பாடி, கே.வி. குப்பம் ஆகிய தொகுதிகள் என்றுமே தி.மு.க. வசம் என்பதை நிரூபிக்கும் வகையில் செயல்படுவேன். நான் உங்களோடு பிறந்தேன். உங்கள் மடியில் வளர்ந்தேன். உங்களுடைய பாராட்டுக்கு ஏற்ப பொறுப்புடன் பணியாற்றுவேன்.

தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், பொதுச் செயலாளர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வழிகாட்டுதலின் பேரில் கட்சி பணியை சிறப்பாக செய்வேன்.

இதற்கு நீங்கள் ஒத்துழைப்பு கொடுத்து, கழக வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும் என்றார்.



வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக புரவலர் துரைசிங்காரம், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், பகுதி செயலாளர்கள் ஜி.வன்னியராஜா, என்.பரமசிவம், ஒன்றிய செயலாளர்கள் கருணாகரன், ரவி, மாநகர துணை செயலாளர் கோ.முரளி பாஸ்கர், மாமன்ற உறுப்பினர்கள் அன்பு, ரவிக்குமார், டீடாசரவணன், விமலா சீனிவாசன், முன்னாள் கூட்டுறவுசங்க தலைவர் தேவசுந்தரம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.